ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

ஐந்தாந்தொகுதி.

R 11-118
1251

பத்திராதிபன்:— பண்டித, ஆ. அரங்கராமாநுஜன்.

மதுரை,

ஹரிஸமய திவாகரம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

பிரபவ—விபவ.

1928-1929.

ஸ்ரீ:

ஐந்தாந்தொகுதியின்

உள்ளுறை.

விஷயம்	எழுதியவர்	பக்கம்
அரிதாஸர்:-	ஸ்ரீ. உ. வே. மு. இராகவையங்கார்ஸ்வாமி திருவல்லிக்கேணி.	25
அந்தர்யாமீ:-	வித்யாரத்நாகர பண்டிதவர ஸ்ரீ. உ. வே. R. நரஸிம்ஹாசார்யஸ்வாமி குடவாசல்.	201
ஸ்ரீ இருந்தவளமுடையார்:-	ஸ்ரீ. உ. வே. மு. இராகவையங்கார்ஸ்வாமி திருவல்லிக்கேணி.	4
உபந்யாஸம்:-	R. கிருஷ்ணய்யங்கார்ஸ்வாமி வானமாமலை.	184
கம்பநாட்டாழ்வார்:-	ஸ்ரீ. உ. வே. T. N. அப்பனையங்கார் ஸ்வாமி மதுரை.	153
ஸ்ரீகிருஷ்ண சரித்திர விமர்சம்	பிரஹ்மஸ்ரீ V. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் மதுரை.	189
திருநாமம்:-	ப. அ.	41
தர்மம்:-	வித்யாரத்நாகர பண்டிதவர ஸ்ரீ. உ. வே. V. R நரஸிம்ஹாசார்யஸ்வாமி, குடவாசல்.	164
தத்வத்ரய விசாரம்:-	ப. அ.	57
நன்கொடை:-	... ...	40
பன்மணித்திரள்:-	... ...	21
பூர்வசிகா ஸ்ரீவைஷ்ணவ ஸபை அக்ராஸநர் ப்ரசங்கம்:-	ஸ்ரீ. உ. வே. எம். ஜி. முகுந்த ராஜையங்கார் ஸ்வாமி சிவகெங்கை.	49

பாகவததாபசாரம்:- ப. அ. 73, 89

மதிப்புரை:- 48, 151, 200

மதுரகவிகள் வினவும் அதற்கு விடையும்:- ப. அ. 105

யக்ஷப்ரச்நம்:- 8, 54, 67, 84, 143, 173, 197

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை:- } ஸ்ரீ. உ. வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமி காரப்பங்காடு. 11, 34, 46, 60, 100, 118, 129, 137, 175, 181

ஸ்ரீராமாநுஜஸித்தாந்த ஸம்ப்ரதாயாபி வர்த்தநீ ஸபா:- } சிரோமணி, ஸ்ரீ. உ. வே. த. சடகோபாசார்யஸ்வாமி வானமாமலை. 175

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸாரம்:- } ஸ்ரீ. உ. வே. வேங்கடாசார்ய ஸ்வாமி சேரன்குளம் 17, 37, 64, 79

ஸ்ரீவைஷ்ணவ வித்வத்ஸபை:- ப்ரதிவாதி பயங்கரமடம் ஸ்வாமிகளின் ஏஜண்டு காஞ்சீபுரம். 103

ஸ்ரீவைஷ்ணவ வித்வத்ஸபையின் விவரணம்:- } ஸ்ரீ: உ. வே ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யஸ்வாமி சி. காஞ்சீபுரம். 133

ஸ்ரீவிதுராழ்வான்:- ப. அ. 121

வானமாமலை ஸ்ரீவைஷ்ணவர் சங்கம்:- } R. கிருஷ்ணய்யங்கார்ஸ்வாமி வானமாமலை. 149

ஸ்ரீவசனபூஷணப் பெயர்ப்பொருள் விளக்கம்:- ப. அ. 177

ஐந்தாந்தொகுதியில் வெளியாகிய புஸ்தக பாரம்

(திவ்யசூரி சரிதம்) ... 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28

(ருக்மாங்கத சரித நாடகம்) 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ரு. பிரபவ௵ தை௴ பகுதி க.
Vol 5. *January & February 1928.* No. 1.

திவாகரத்தின் ஐந்தாவதாண்டு.

R011-118
1251

மாநிலஞ்சேவடியாகத்தூநீர்
வளைநரல்பெளவமுடுக்கையாக
விசும்புமெய்யாகத்திசைகையாகப்
பசுங்கதிர்மதியமொடுசுடர்கண்ணாக
வியன்றவெல்லாம்பயின்றகத்தடக்கிய
வேதமுதல்வனென்ப
தீதறவிளங்கியதிகிரியோனே.

ஸ்ரீய:பதியாகிய ஸர்வேசுவரனது பரமகிருபையால் நமது திவாகரத்தின் நான்காவதாண்டு இனிது நிறைவேறி ஐந்தாவதாண்டும் தொடங்குகிறது. (காரப்பங்காடு) ஸ்ரீமதுபயவேதாந்த ப்ரவர்த்தகராய் எழுந்தருளியிருக்கிற சிங்கப்பெருமாள்ஸ்வாமி, எட்டையபுரம் ஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீ. உ. வே. திரு. வீ. சாமிஐயங்கார் ஸ்வாமி முதலானோர்களுடைய வியாசங்களையும் நமது திவாகரம் தனக்கங்கங்களாகக்கொண்டுள்ளதினால் இது எல்லோரையும் மகிழ்விக்கும் பெற்றியதாய் விளங்குகிறது.

நமது பூர்வாசார்யர்கள் அருமையாகப் போற்றிச் சேமித்து வைத்துள்ள விழுநிதி பலவற்றையும் நமது திவாகரம் தந்துதவு

மாற்றால் வழங்குகிறதினுல் பலர் திட்பநுட்பமுடைய மதியினராய் விளங்குகின்றார்களென்று அறிஞர் கொண்டாடுதலைக்கண்டு மகிழ்கின்றோம்.

திவாகரத்தினுற் கிடைக்கப்பெறும் ஊதியத்தைக்கொண்டு அவாமிக்குடைய மாணவர்கட்கு ஸம்ப்ரதாய ஜ்ஞாநத்தைப் பயிற்றுவிக்க வேண்டுமென்ற முக்கிய நோக்கத்தினுல் திவாகரந்தொடங்கப் பெற்றதென்பதைக் குறித்துப் பத்திரிகை வாயிலாகவும், பலர் முன்னிலையிலும் தெரிவித்துள்ளோம். அங்ஙனந் தெரிவித்துக்கொண்டதற்கிணங்க இதுவரை திவாகரத்தினுல் தக்க பிரயோஜனத்தைக் கண்டிலோமாதலால் கருதியவண்ணஞ் செய்வதற்கியலவில்லை. இத்தகைய கார்யத்தைப் பிறர்துணையின்றித் தனியே நடத்துதற்கு ஆற்றலுடைய ஸ்ரீமாங்கள் எத்துணையோ பெயரிருக்கிறார்கள். எம்போன்றவர்களுடைய துர்ப்பாக்கியத்தால் அவர்கட்கெல்லாம் இக்கார்யத்தில் முயற்சியுண்டாகிறதில்லை.

இப்பொழுது உலகம் ஆஸ்திகதர்மத்தை இழந்துவிட்டதோவென்று ஐயுறும்படி எடுத்துரைப்பதற்கும் அசப்யமான பல விரோதவழக்குகளை மேற்கொண்டு எதிரிட்டுக் கொண்டிருக்கிறது. இங்ஙனமிருக்கின்ற உலகில் நம் ஸம்ப்ரதாயத்தை மேற்கொண்டொழுகுவார் ஒருசிலராயிருக்கின்றனர். இவர்களேனும் ஸம்ப்ரதாயத்தைக் கடைப்பிடித்தொழுகுதற்குரிய நன்மார்க்கத்தைக் காட்டாதொழியின் நம் பூர்வாசார்யர்களாற் கட்டப்பெற்ற வேலியாதாகுமோ?

இஃதொருபுறமிருக்க; நமது ஸம்ப்ரதாயம் மேன்மேலும் நன்கு விர்த்தியடைதற்குரிய சுலபோபாயத்தை ஆராய்வதும் நமது கடமையாகும். நம்பூர்வாசார்யர்களுட் சிறந்தவரான ஸ்ரீஉடையவர் ஆங்காங்குச் சென்று நம் ஸம்ப்ரதாயத்தை வெளியிட்டதாலன்றோ அக்காலத்து நமது சமயம் யாண்டும் பரவி விளங்கியது. அது போல இப்பொழுதும் ஸம்ப்ரதாயம்வல்லவர்களைக்கொண்டு நாடு நகரங்களிலுள்ளவர்கட்குத் தத்வார்த்தங்களைப் போதிப்பிக்கும்படி செய்யவேண்டும். இதுவே நமது ஸமயம் விர்த்தியடைதற்குத் தக்க உபாயமாகத் தோற்றுகிறது. இக்கார்யத்தை எளிதிற்பூர்த்தி

2595

செய்ய நமது திவாகரத்திற்கு ஸம்ரக்ஷகராகவும், போஷகராகவும், ஜீவிதசந்தாதார்களாகவும், சந்தாதார்களாகவும் சேர்ந்துதவி புரிதற்கு முற்படுவாராக.

இவ்வாண்டுமுதல் கருதிய இக்கார்யம் விர்த்தியடைதற்கு இடைவிடாமுயற்சி செய்வதாகக் கருதியுள்ளோம். அக்கருத்துக்கிணங்கப் பலரும் இவ்விஷயத்தில் அபிமானமுடையவர்களாகவிருக்கவேண்டுமென்பதே நமது பிரார்த்தனை.

நமது திவாகரத்திற்குச் சென்ற ஆண்டு முடிவாக ஸம்ரக்ஷகராகச் சேர்ந்தவர் நால்வரும், போஷகராகச் சேர்ந்தவர் ஒருவரும், ஜீவிதசந்தாதார்களாகச் சேர்ந்தவர் ஐம்பத்தெண்மரும் ஆக அறுபத்து மூவராவர். இவ்வாண்டில் போஷகராகச் சேர்ந்தவர் ஒருவரும், ஜீவிதசந்தாதாராகச் சேர்ந்தவர் ஒருவருமே யாவர். இவ்வாண்டில் மிகுதியாக ஜீவிதசந்தாதார்கள் சேரவில்லை என்பதைக் குறித்து வருந்துகிறோம். இக்குறையகல இனியாவது இப்பொழுது சேர்ந்துள்ள சாதாரணசந்தாதார்களுள் தகுதியுடையார் ஜீவிதசந்தாதார்களாகச் சேர்ந்தும், அஃதில்லாதவர் பலசந்தாதார்களைச் சேர்ப்பித்தும் உபகரிக்கவேண்டுகிறோம்.

திவாகரத்தைக் காலநிகதிக்கேற்ப இயன்றவளவில் சீர்திருத்தம் செய்துவருகிற முறையில் இனிமேலும் தக்கவாறு சீர்திருத்தஞ் செய்யலாகும். ஆதலால், எல்லோரும் திவாகரம் நன்னிலையினின்று விளங்க வேண்டியமுயற்சி செய்வார்களென்றே நம்புகிறோம்.

இவ்வளவு காலமாகச் சந்தாதார்களாகச் சேர்ந்துதவி புரிகின்றவர்கள் தங்களுடைய சந்தாப்பணத்தைக் காலம் நீடித்தனுப்பக் கருதாமல் விரைவிலனுப்ப வேண்டுகிறோம்.

ப. அ.

ஸ்ரீ:

ஸ்ரீ இருந்தவளமுடையார்.

சிலப்பதிகாரம், துன்பமாலையில் வரும்,

"ஆயர் முதுமக ளாடிய சாயலாள்
பூவும் புகையும் புனைசாந்துங் கண்ணியும்
நீடுநீர் வையை நெடுமா லடியேத்தத்
தூவித் துறைபடியப் போயினாள்."

என்ற அடிகளில், மாதரியென்னும் ஆயர் முதுமகள் ஆய்ச்சியர் குரவை முடிந்ததும், வையையாற்றின் கரையிடத்துள்ள நெடு மாலைப் பூசிப்பதற்குச் சென்றாள் என்று கூறப்பட்டுளது. "வையை நெடுமால்" என்பதற்குச் சிலப்பதிகார அரும்பதவுரைகாரர் ஸ்ரீ இருந்தவளமுடையார் என்று விளக்கம் எழுதினர். அடியார்க்கு நல்லார் அத்திருமாலை "அந்தரவானத் தெம்பெருமான்" என்றார். இளங்கோவடிகள் "நீடுநீர் வையை நெடுமா லடிதொழு" எனப் பொதுப்படக் கூறுதலால் மதுரையிற் பிரபலமான திருமாலைப்பற்றியே அவர் குறிப்பிடுகின்றார் என்பது புலப்படும். இங்ஙனம், உரையாளர் கூறியபடி இருந்தவளமுடையார், அந்தரவானத் தெம்பெருமான் என்ற திருநாமங்களுடன் வையைக்கரையில் திருமால் கோயில்கொண்ட விஷயம், இப்போது கூடன்மாநகரிற் காண்டல் அரிதேயாம். ஆயினும், திருமாலது நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாய் மதுரையைச்சார்ந்து விளங்கும் கூடலழகரைப் பற்றியே மேற்கூறிய விஷயங்கள்யாவும் அமைந்துகிடக்கின்றன; இதனையிண்டாராய்வோம். அரும்பதவுரையாசிரியர் "வையைநெடுமால்" என்பதற்குக்கூறிய "ஸ்ரீ இருந்தவளமுடையார்" என்ற திருநாமம், கூடலழகர்க்கு இப்போது வழங்கவில்லையேனும் அப்பெருமானது இருந்த திருக்கோலம், ஆங்குவந்து தரிசிப்போர்க்குப் பேரானந்தந்தரத்தக்க வண்ணம் இன்றுமுண்மையால், அக்காரணம்பற்றியே வழங்கியதாகல்வேண்டும். இருந்தவளமுடையார்–இருந்த திருக்கோலத்தின் வளப்பமுடையார். திருமாலைத் துதிக்கும் பெரியோர்கள் அப்

பெருமானது நின்ற, இருந்த, கிடந்த திருக்கோலங்களைச் சிறப்பித்தல் இயல்பாதலுங் காண்க. இனி இருந்த திருக்கோலத்தோடு திருமால் எழுந்தருளிய பதியை இருந்தவளமெனவும், அப்பெருமானை இருந்தவளமுடையார் எனவும் கொள்ளலுமாம். திருவாலவாயுடையார், திருவாப்புடையார் எனச் சிவபிரானைக்கூறும் வழக்கும் நோக்குக.

இனி, தொல்காப்பியம், செய்யுளியலில், "கொச்சகமாரகம்" என்ற சூத்திரத்தே, பேராசிரியர்காட்டியதும் திருமாலைப்பற்றியதுமான பரிபாடற்பகுதியாகிய

"வானா றெழிலி மழைவள நந்தத்
தேனார் சிமய மலையி னிழிதந்து
நான்மாடக் கூட லெதிர்கொள்ள வானா
மருந்தாகுந் தீநீர் மலிதுறை மேய*
இருந்தையூர் அமர்ந்த செல்வநின்
திருந்தடி தலையுறப் பரவுதுந் தொழுதே."

என்ற அடிகளில், இருந்தையூர் என்பது, மதுரையைச் சார்ந்து வையைக்கரைக்க ணுள்ளதெனவும், அவ்வூரில் திருமால் திருக்கோயில் கொண்டவாறும் கூறப்பட்டுள்ளன. அரும்பதவுரைகாரர்கூறிய இருந்தவளமென்னும் மதுரைப்பகுதியே இருந்தையூரென்னும்பெயரால் பரிபாடலில் வழங்கலாயிற்றென்பதை இஃது எளிதில் விளக்கக்கூடியது. இருந்தையூர்-இருந்தவூர் என்பதன் மரூஉ. திருமால் திருப்பதிகளில் ஒன்றாகிய "நின்றவூர்" போல இதனைக்கொள்க. "இருந்தையூர் அமர்ந்த செல்வ" என, திருமாலது இருந்த திருக்கோலம் குறிப்பிடப்படுதலும் கவனிக்கத்தக்கது. இவ்வாறு இருந்தையூர் இருந்தவளம் என்ற பெயருடன் மதுரைப்பக்கத்து வேறு ஊரொன்றுங் காணப்படாமையால், நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகிய கூடலழகர் சந்நிதியுள்ள திவ்யதேசத்திற்கே, அப்பெயர் முற்காலத்திற் வழங்கியிருக்கவேண்டுமென்பது வெளியாகிறது.

---

* "மலிதுறையெம் விருந்தையூர்" என்று அச்சுப்பிரதியிலுள்ளதாயினும், சங்கத்துத் தொல்காப்பியவுரைப் பிரதிகளில் "மலிதுறைமேய விருந்தையூர்" என்றே காணப்படுகின்றது.

இவ்விருந்தையூர் போலவே மதுரையைச்சூழ்ந்து பலஸ்தலங்கள் முற்காலத்திருந்தனவென்பது,

“வடதிரு வால வாய்திரு நடுவூர்
வெள்ளி யம்பலம் நள்ளா றிந்திரை
பஞ்சவ னீச்சரம் அஞ்செழுத் தமைத்த
சென்னி மாபுரம் சோரன் திருத்தளி
கன்னிசெங் கோட்டம் கரியோன் திருவுறை
.... ஒருபரங் குன்றம்
சூழ்கொள விருந்த கூடலெம் பெருமான்.”

என்னும் கல்லாட (சுஅ) அடிகளானும்; “நான்குமாடங் கூடுதலின் நான்மாடக் கூடல் என்றாயிற்று; அவை, திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர்” எனக்கலித்தொகை, கூஉ-ம் பாட்டில் எழுதிய நச்சினார்க்கினியர் உரையானும் விளங்குகின்றது. இவற்றிற்கண்ட பல பெயர்கள் இக்காலத்து வழங்கக்காணாமை போல, இருந்தையூர் என்ற வழக்கும் அரிதாயிற்றெனவுணர்க. கல்லாடத்தில், “கரியோன் றிருவுறை” எனவும், சிலப்பதிகாரத்தில், “உவணச்சேவ லுயர்த்தோனியமமும்” எனவும் (ஊர்காண்காதை) கூறப்பட்டவை, “வையை நெடுமால்” பதியாகிய இவ்விருந்தையூரையே குறித்ததாகக் கருதத்தக்கது. இருந்தையூர்க் கருங்கோழியார் என்ற புலவர்தாமும் இதுவேபோலும்.

இனி அடியார்க்குநல்லார், “வையைக்கரையிநெடுமால்” என்பதற்கு “அந்தரவானத்தெம்பெருமான்” எனக்கூறியதும், கூடழகர் விஷயமாகவே கொள்ளல் தகும். என்னே? ஷை திருக்கோயில் மேல்விமானத்தில், கிடந்த திருக்கோலத்தோடு அப்பெருமான் எழுந்தருளியிருத்தலால் என்க.

இனி, வையைக்கரையிநெடுமால் என்று சிலப்பதிகாரங்கூறுமாறு, கூடலழகர் சந்நிதி, வையைக் கரைக்கணன்றி மதுரைக்கு மேல்புறமுளதே எனின்:— மதுரையின் இருபக்கத்தும் அந்நதி சூழ்ந்து சென்றதாகவே முன்னை வழக்குண்மையால் தென்பக்கத்தும் அதன்போக்கு உள்ளதேயாகும். தென்பாலிலுள்ள வையைப் பிரிவு இக்காலத்துக் “கிருதமாலை” எனவழங்கப்பெற்றுக் கூடழ

கர் கோயிற்பக்கத்தோடுகின்றது. மதுரைக் கோட்டையைச்சுற்றி மாலைபோல் ஓடுதலின் அதற்கு இப்பெயர் வழங்கியதென்பர்.

"வேக மாதலின் வேக வதியென்றும்
மாகம் வாய்ந்ததனல்வையை யென்றுந்தா
ராக லாற்கிருத மாலைய தாமென்றும்
நாகர் முப்பெயர் நாட்டு நதியரோ"

என்பது கூடற்புராணம். கலித்தொகையிலும் (மருதக்கலி-உ,)

*"இருநிலம்—தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்
நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேராதார்
போர்முற்றொன் றறியாத புனல்சூழ்ந்த வயலூரான்"

என, இவ்வையை, மாலைசூழ்ந்ததுபோல மதுரையைச் சூழ்ந்து நின்றபடி நன்கு விளக்கப்பட்டிருப்பதும் இங்கு நோக்கத்தக்கது. இவற்றால், "நீடுநீர் வையைநெடுமால்" என்ற சிலப்பதிகாரத் தொடர், அரும்பதவுரையாசிரியர் அடியார்க்கு நல்லார் இவர்களெழுத்தாலும் பரிபாடற்பாட்டாலும் இப்போதுள்ள கூடலழகர் சந்நிதியையே குறித்ததாதல் உய்த்துணர்க.

மு. இராகவையங்கார்,

திருவல்லிக்கேணி.

---

* "பெரிய நிலமடந்தை தான், ஒரு பூமாலையைச் சூழ்ந்துகொண்டிருந்த தன்மைபோல, அழகு பொலிவுற்ற வையையாற்றினது நீர்சூழ்ந்து மதிலைப் பொரும் பகையன்றிப் பகைவர் போரால் வளைத்தலைச் சிறிதும் அறியாத புரிசை சூழ்ந்த புனலையுடைத்தாகிய மதுரையையுடையவன்" என்பது நச்சினார்க்கினியர் உரை.

ஸ்ரீ:

யக்ஷப்ரச்நம்.

(257-ம் பக்கத்தொடர்ச்சி.)

(௰௩) யக்ஷ:- 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑍇𑌕𑌪𑌦𑌂 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑍇𑌕𑌪𑌦𑌂 𑌯𑌶𑌃।
𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑍇𑌕𑌪𑌦𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍍𑌯𑌂 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑍇𑌕𑌪𑌦𑌂 𑌸𑍁𑌖𑌂॥

கிம்ஸ்விதேகபதம் தர்ம்யம் கிம்ஸ்விதேகபதம் யச:
கிம்ஸ்விதேகபதம் ஸ்வர்க்யம் கிம்ஸ்விதேகபதம் ஸுகம்.

(இ-ள்) முடிவாகத் தர்மத்தினின்றும் நீங்காதிருப்பது எது? முடிவாகப் புகழைத்தருவது எது? தீர்மானமாகத் துறக்கத்தைப் பயப்பது எது? ஸுக்மாவது எது? எ-ம்.

தர்ம:- 𑌦𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑍇𑌕𑌪𑌦𑌂 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌦𑌾𑌨𑌮𑍇𑌕𑌪𑌦𑌂 𑌯𑌶𑌃।
𑌸𑌤𑍍𑌯𑌮𑍇𑌕𑌪𑌦𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍍𑌯𑌂 𑌶𑍀𑌲𑌮𑍇𑌕𑌪𑌦𑌂 𑌸𑍁𑌖𑌂॥

தாக்ஷ்யமேகபதம் தர்ம்யம் தாநமேகபதம் யச:
ஸத்யமேகபதம் ஸ்வர்க்யம் சீலமேகபதம் ஸுகம்.

இத்துணையுங்கூறியவாற்றால், மோக்ஷமாகிய ஸாத்தியத்தை பெறுதற்கு ஆத்மஜ்ஞாநம் வேண்டுமென்பதும், அதற்கு வேதமும் சமதமகுணமுதலிய ஆத்மகுணங்களும் வேதார்த்த ச்ரவணங்களும் ஸாதனங்களாமென்பதும், வேதார்த்த ச்ரவணத்திற்குரியாராவா ரிவரென்பதும், அவருக்கு ப்ராணன் மனமுதலியன இன்றியமையா ஸாதனங்களாமென்பதும், இவ்வளவுங் கைகூடப் பெறுதார் தேவயக்ஞமுதலியவற்றைக் கைக்கொள்ளவேண்டுமென்பதும், இவற்றைச் செய்யாதார்க்கு வரும் ஏதமின்னதென்பதும், இவ்வாறு தேவயக்ஞம் முதலியவற்றைச் செய்தற்குச் சக்தியற்றவர்கள் தாய்தந்தையர்களின் பணிவிடைமுதலியவற்றால் ஈடேறவேண்டுமென்பதும், இவற்றையுங் கைக்கொள்ளுதற்கு ஏலாதார் தானத்தையாவது மேற்கொள்ளவேண்டுமென்பதும், தானத்தை மேற்கொண்டவர்கள் அதனால் மன்மாசு நீங்கப்பெற்று வேள்விமுதலிய நற்கருமங்கள் செய்வார்களாதலால் மனமொருவழிப்பட்டு ஜீவன்முக்ததசையும் முடிவில் மோக்ஷத்தையும் பெறுவார்களென்பதும் பெறப்பட்டன.

(௰௪) இனி, ஆத்மஜ்ஞாநத்திற்குரிய ஸாதனங்கள் பிறிதொருவகையாற் கூறப்படுகின்றன.

(இ-ள்) 46 முடிவாகத் தர்மத்தினின்றும் நீங்காதிருப்பது சதுரப்பாடுடைய முயற்சியாம். (47) முடிவான யசஸாவது தானமாம். (48) தீர்மானமாகத் துறக்கத்தைப் பயப்பது ஸத்யமாம். (49) முடிவான ஸுகமாவது சீலமாம்; எ-ம்.

(டு0) யக்ஷ:- கிංஸ்விதா3த்மா மநுஷ்யஸ்ய கිංஸ்விதை3வக்ருத: ஸகா।
உபஜீவநம் கිංஸ்விதஸ்ய கිංஸ்விதஸ்ய பராயணம் ॥

---

(46) இங்குச் சதுரப்பாடுடைய முயற்சியென்றது வேள்விமுதலிய நற்கர்மங்களிலுண்டாமுயற்சியை. "தாளாண்மையென்னுந் தகைமைக் கட்டங்கிற்றே, வேளாண்மை யென்னுஞ்செருக்கு" எல்லாருக்குமுபகாரஞ் செய்தலென்னும் மேம்பாடு முயற்சியென்று சொல்லப்படுகிற உயர்ந்த குணத்தின் கண்ணே நிலைபெற்றது என்றிருப்பதால் முயற்சி வேள்விமுதலிய நற்கர்மங்கள் இனிது நிறைவேறுதற்கு இன்றியமையாத தொன்றாகும். அதனால் 'முடிவாகத் தர்மத்தினின்றும் நீங்காதிருப்பது சதுரப்பாடுடைய முயற்சியாம்' என்று சொல்லப்பட்டது.

(47) "ஈதலிசைபடவாழ்தலதுவல்லது, ஊதியமில்லையுயிர்க்கு" என்றபடி ஈதலால் வரும் புகழைப்பெற்று வாழ்வதன்றி ஜீவன் பெறும்பேறு வேறொன்றுமில்லை. இத்தகைய புகழைப் பயப்பதாகிய தானத்தை மேற்கொள்ளவேண்டியது அவசியமாதலால் இங்கு 'முடிவான யசஸாவது தானமாம்' என்று சொல்லப்பட்டது.

(48) ஈண்டுத் துறக்கம் என்றது வீடுபேற்றை. (மோக்ஷத்தை) ஒருவன் ஸத்யமொன்றையே கைப்பற்றி அதை நிலைநிறுத்துவானாகில் அதுவே மோக்ஷத்தைப் பயந்துவிடுமாதலால் 'தீர்மானமாகத் துறக்கத்தைப் பயப்பது ஸத்யமாம்' என்று சொல்லப்பட்டது. "பொய்யாமை பொய்யாமை யாற்றினறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று" என்பதும், "ஸத்யேந லோகாந் ஜயதி" "ஸத்யேந லோகாந் ஜயதி" (ஸத்தியத்தினால் லோகங்களை ஜயிக்கிறான்) என்பதும் இங்கு அறியத்தக்கன.

(49) சீலமாவது—நல்லொழுக்கமாம். அது நன்றிக்கு (நல்லதர்மத்திற்கு) வித்தாய்நின்று நன்மையைப் பயக்குமாதலால் 'முடிவான சுகமாவது சீலமாம்' என்று சொல்லப்பட்டது. இதனால் ஆத்மஜ்ஞாநத்தைப்பெற விரும்புகின்றவன் நற்கர்மங்களில் இடைவிடாமுயற்சியையும், தானத்தையும், ஸத்யத்தையும், நல்லொழுக்கத்தையும் அவசியம் கைக்கொள்ளவேண்டுமென்பது பெறப்படும்.

(டு0) இனி, இங்குக்கூறப்பட்டுள்ள முயற்சிமுதலிய நான்கனுள் தானமே சிறந்ததென்பது உவமை முகத்தான் வலியுறுத்தப்படுகிறது.

கிம்ஸ்விதாத்மா மநுஷ்யஸ்ய கிம்ஸ்வித்தைவக்ருத: ஸகா
உபஜீவனம் கிம்ஸ்விதஸ்ய கிம்ஸ்விதஸ்ய பராயணம்.

(இ-ள்.) மனிதனுக்கு ஆத்மா எது? இவனுக்குத் தெய்வத்தாலமைந்த துணை யார்? இவனுக்கு உபஜீவனமாவது எது? இவன் ஒழிவின்றிச் செய்யத்தக்கது யாது? எ-ம்.

தர்ம:- 𑌪𑍁𑌤𑍍𑌰𑌆𑌤𑍍𑌮𑌾 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌸𑍍𑌯 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌦𑍈𑌵𑌕𑍃𑌤𑌃 𑌸𑌖𑌾 ।
𑌉𑌪𑌜𑍀𑌵𑌨𑌂𑌚 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌃 𑌦𑌾𑌨𑌮𑌸𑍍𑌯 𑌪𑌰𑌾𑌯𑌣𑌂 ॥

புத்ரஆத்மா மநுஷ்யஸ்ய பார்யாதைவக்ருத: ஸகா
உபஜீவநஞ்ச பர்ஜந்ய: தானமஸ்ய பராயணம்.

(இ-ள்) (50) மனிதனுக்கு ஆத்மா புதல்வனும். (51) இவனுக்குத் தெய்வத்தானமைந்த துணை மனைவியாம். (52) இவனுக்கு உபஜீவனம் மழையாம். (53) இவன் ஒழியாமல் செய்யத்தக்கது தானமாம்; எ-று.

(தொடரும்.)

(50–53) இங்கு 'இவன் ஒழியாமற் செய்யத்தக்கது தானமாம்' என்றுரைக்கப்பட்ட வாக்யத்துக்கு முன்புள்ள மூன்று வாக்யங்களும் உவமைகளாம். அவை வருமாறு:—

I "𑌆𑌤𑍍𑌮𑌾𑌵𑍈 𑌪𑍁𑌤𑍍𑌰𑌨𑌾𑌮𑌾𑌸𑌿" "ஆத்மாஸவை புத்ரநாமாஸி" (எனதாத்மாவாகிய நீயே புதல்வனென்ற பெயருள்ளவனுகிருய்) என்று வேதத்திற்கூறப்பட்டிருப்பதாலும், தகப்பன் உயிர் நீத்தவிடத்தும் புதல்வன் அவனுக்கு ஒப்பாய்நின்று அவனது புகழை விளக்குகின்றுனதலாலும் 'மனிதனுக்கு ஆத்மா புதல்வனும்' என்றுரைக்கப்பட்டது. புதல்வன் தகப்பனை நிரயத்துன்பத்தழுந்த வொட்டாமற் காப்பாற்றி அவனை இன்புறச்செய்வது போல தானமும் பிறவிப்பிணியை அநுபவிக்கவொட்டாமற் காப்பாற்றி இன்புறச்செய்யும் இயல்பினதாயிருக்கும்.

II இங்குத் தெய்வத்தானமைந்த துணையென்பதற்கு [illegible]ல்லூழானமைந்த துணையென்று பொருள்கொள்ளத்தக்கது. 'தாரம் வாய்ப்பதும் தவப்பயன்' என்ற முதுமொழிப்படி இல்லறம்வழுவாது நடத்தற்கிசைந்த மனைவிவாய்ப்பது நல்லூழாலும் என்பது தெளியப்படுமாதலால் 'இவனுக்குத் தெய்வத்தானமைந்த துணை மனைவியாம்' என்றுரைக்கப்பட்டது.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜஸித்தாந்த ப்ரகாசிகை.

[காரப்பங்காடு ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(262-ம் பக்கத்தொடர்ச்சி.)

இப்படி இருந்துள்ள ப்ரபத்திநிஷ்டனுக்கு நிஷித்தவர்ஜநம் ஆவசியகம்; கேவலாசிரமீ பக்திநிஷ்டன் இவர்களுக்கும் ஆவசியகம். "𑌵𑌰𑍍𑌜𑌨𑍀𑌯𑌂 𑌅𑌕𑍃𑌤𑍍𑌯𑌞𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌕𑌰𑌣𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌃" "வர்ஜநீயம் அக்ருத்பஞ்து ஸர்வேஷாம் கரணைஸ்த்ருபி:" என்று கரணத்ரயத்தாலேயும் அகிருத்தியத்தைச் செய்யக்கூடாதென ப்ரமாணமிருப்பதால் அதில் மந்தாதிகள் பாபம் என்கிற புத்தியாலே செய்யமாட்டார்கள். அப்படி ப்ராமாதிகமாக நேரும்பக்ஷத்தில் அவைகளுக்கு விஹிதங்களான ப்ராய:சித்தங்களை அநுஷ்டிக்கை ஆவசியகம்.

மனைவியானவள் இல்வாழ்க்கைக்கும், அவ்வாழ்க்கைக்குரிய தர்மத்திற்கும் இன்றியமையாத் துணையாயிருந்து இம்மைமறுமைகளில் நல்லப்ரயோஜனத்தைப் பெறச்செய்வதுபோலத் தானமும். புகழை நிலைநாட்டுதற்கு இன்றியமையாத்துணையாயிருந்து இருமைப் பயனைக் கொடுக்குமியல்பினதாயிருக்கும்.

III. உபஜீவனமாவது—தன்னுயிரும், பிறவுயிர்களும் நிலைபெறுதற்கேதுவாயிருப்பதெதுவோ அதுவாம். "வானின்றுலகம் வழங்கி வருதலால், தானமிழ்த மென்றுணரற் பாற்று" என்றபடி உலகம் நிலைபெறுதற்கு மழை காரணமாயிருப்பதுபோலத் தானமும் வீடுபெற விரும்புகிற முமுக்ஷுவான ஜீவனுக்கு உஜ்ஜீவனமாயிருக்கும்.

. . இதற்குமுன் உரைக்கப்பட்ட தானமானது சித்த சுத்திவாயிலாக வேள்விமுதலிய நற்கர்மங்களில் ப்ரவிருத்தியையும், ஈசுவரோபாஸனைக்குரிய ஒருநிலைப்பட்ட மனத்தையும் பயந்து பின்னர் மோக்ஷத்தைத் தருவதாயிருக்குமாதலால் அதைக் கையாளுதற்குரியார் ஒரு சிலரேயாவர். இங்குச் சொல்லப்பட்ட தானமானது புகழ்காரணமாய் நின்று இருமைப்பயனைத் தருவதாயிருக்கும் என்றதனல் இது யாவரும் கையாளுதற்குரியதாயிருக்குமென்றறியத்தக்கது.

பரமைகாந்திகளான உத்தமாதிகாரிகள் பகவதநபிமதத்தில் ருசியில்லாதவர்களாகையாலே நிஷித்தத்தைச் செய்யவேமாட்டார்கள். அப்படி ப்ராமாதிகமாக நேர்ந்தால் ப்ராய: சித்தம் புந: ப்ரபதநமாவது ப்ரபத்திஸ்மரணமாவது ஆவசியகம். ப்ரதிபதோக்த ப்ராய: சித்தம் லோகஸங்கிரஹார்த்தம் அநுஷ்டேயம்.

இந்த பரமைகாந்தியான அதிகாரிக்கு பாஞ்சகாலிகங்களான கர்மாக்களுடைய அநுஷ்டானம் ஆவசியகம். பாஞ்சகாலிக கர்மாக்களாவன:— ஒருதினத்தை ஐந்து பாகமாகப்பிரித்து அந்த ஐந்து காலங்களிலே கிரமமாயநுஷ்டிக்கப்படுமவையான அபிகமந உபாதாந இஜ்யா ஸ்வாத்யாய யோகங்களாம்.

அவைகளில் அபிகமனமாவது:— ப்ராஹ்ம முஹூர்த்தத்தில் எழுந்திருந்து பகவந்நாமஸங்கீர்த்தநாதிகளைப் பண்ணி, தந்ததாவந ஸ்நாந ஊர்த்துவபுண்ட்ரதாரண ஸந்த்யா ஜப முதலானவற்றோடு அர்ச்சாரூபி பகவதபிகமநம்செய்கை.

உபாதாநமாவது:— பகவதாராதனத்துக்கு உபயுக்தங்களான திரவ்யங்களை ஸம்பாதிக்கை.

இஜ்யையாவது:— பகவதாராதநம்.

ஸ்வாத்யாயமாவது:— இதிஹாஸபுராணபடனம், தத்த்வவிசாரம், தத்பாடகம், க்ரந்தநிர்மாணம், கிரந்தலேகநம் இவைகள்.

யோகமாவது:— ஸர்வேசுவரன் ஸர்வசேஷி; சேதநன் சேஷபூதன் என்று சேஷ சேஷிபாவாநுஸந்தானம். இவைகளுக்கு ப்ரமாணங்கள்.

[illegible]
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

"ஆமுஹூர்த்தாத்து வைப்ராஹ்மாத் அஹ்னோம்சம்
ப்ரஹராத்ஸமதீ:
ஸ்நாநார்ச்சநஜபஸ்தோத்ர பாடை: காலம் விநோதயேத்
உபாதாந விதிம்வக்ஷ்யே யோக்யா யோக்ய விபாகத:
த்விதீயகால கர்த்தவ்யம் வக்ஷ்யாமி முநிபுங்கவ."

என்று தொடங்கி,

𑌯𑌥𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍁𑌪𑌾𑌦𑌾𑌨𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍 𑌭𑍋𑌗𑌨𑌿𑌸𑍍𑌪𑍃𑌹𑌃 ।
𑌭𑌗𑌵𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌲𑌾𑌭𑍇𑌨 𑌤𑍃𑌪𑍍𑌤𑍋 𑌯𑌸𑍍𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

"யதாசாஸ்திரமுபாதாநம் ஆசரந் போகநிஸ்ப்ருஹ:
பகவத்கர்ம லாபேநத்ருப்தோயஸ் ஸஸாதீபவேத்."

என்பனவாம்.

இனி, பகவதாராதநரூபமான இஜ்யையின் ப்ரகாரம் மேல் விவரிக்கப்படும், "𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 [illegible]" "பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யந்மே பக்த்யா ப்ரயச்சதி" இத்யாதிகளாம்.

ஸ்வாத்யாய யோகங்களுக்கு ப்ரமாணம்.

𑌸𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑌾𑌠𑌪𑌠𑌨𑍈𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌶𑌿𑌕𑍍𑌷𑌯𑌾 ।
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑍈𑌰𑍍𑌵𑌾𑌪𑌿 𑌶𑌿𑌕𑍍𑌷𑌯𑍇𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌾𑌦𑌰𑌾𑌤𑍍 ॥
𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑍈𑌰𑍍𑌲𑍇𑌖𑌨𑍈𑌰𑍍𑌵𑌾𑌪𑌿 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌣𑌕𑌰𑍍𑌮𑌣𑌾
𑌶𑌿𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌶𑌿𑌕𑍍𑌷𑌯𑌾𑌵𑌾𑌪𑌿 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

"ஸச்சாஸ்த்ர பாடபடனை: சாஸ்த்ரார்த்த ஸ்யாபிசிக்ஷயா
சாஸ்த்ரார்த்த ஜ்ஞாபனைர்வாபி சிக்ஷயேத் சாஸ்த்ரமாதராத்
வ்யாக்யானைர் லேகனைர்வாபி க்ருந்தநிர்மாண கர்மணா
சிஷ்யாணாம் சிக்ஷயாவாபி ஸ்வாத்யாயார்த்தாய உச்யதே."

என்றும்,

[illegible] ।
[illegible] ।

"ஈத்ருச: பரமாத்மாயம் ப்ரத்யகாத்மா ததேத்ருச:
தத்ஸம்பந்தாநுஸந்தாநம் இதியோக: ப்ரகீர்த்தித:"

என்றும் சொல்வனவாம்.

இப்படியிருந்துள்ள அபிகமந, உபாதாந, இஜ்யா, ஸ்வாத்யாய, யோகங்கள் கைங்கர்யபுத்யா அநுஷ்டேயங்கள், இவைகளை முழுதும் அநுஷ்டிக்க சக்தியில்லாமலிருந்தால் இந்த ஐந்து கர்மாக்களுக்குள் அநுஷ்டிக்கமுடிந்த ஏதேனும் ஒரு கர்மாவை அநுஷ்டித்தால் போரும். இஜ்யாரூபமான பகவதாராதனமே ப்ரதானமாயிருக்கிற அதிகாரிக்கு, "ஐஜ்யா ஊவத ெகவலம்" "இஜ்யா ஏவது கேவலம்" என்கிற வசனத்தாலே அந்த பகவதாராதனமே அந்த பாஞ்சகாலிக கர்மஸ்தாநாபந்நம்.

அதவா ஸ்வாத்யாயமாவது, யோகமாவது அநுஷ்டிக்கும் பக்ஷத்தில் அதுவே பாஞ்சகாலிக கர்மஸ்தாநாபந்நமாகலாம். இதனை, "ஸ்வாய்யாயெநாவிவிஷ: ஸ்வயொமெநாவிவாக்ருதம்" "ஸ்வாத்யாயேநாபிவிதுஷ: ஸ்வயோகேநாபிவாக்ருதம்" என்கிற ப்ரமாணத்தாற் கண்டுகொள்வது.

ஆசார்யநிஷ்டனுக்கு ஆசார்யாராதனமே பாஞ்சகாலிக கர்மஸ்தாநாபந்நம். அப்படியே பாகவதாராதந நிஷ்டனுக்கும் பாகவதாராதநமே தத்ஸ்தாநாபந்நம். இதற்கு ப்ரமாணம். "பூஜநெந ஶுரொவாவி ஸதாம்வா வரிவெஷணாத்" "பூஜநேந குரோர்வாபி ஸதாம்வா பரிவேஷணாத்" என்பதாம்.

இப்படி இருந்துள்ள அதிகாரிக்கு ஸ்நாநம் முதலான நித்ய கர்மாக்களுடைய அநுஷ்டான க்ரமம் நிரூபிக்கப்படுகிறது. அதில் பகவதாராதனோபயுக்தமாகவே ஸ்நாநமநுஷ்டேயம். பதிவ்ரதைகளான ஸ்திரீகளுடைய தேஹம் பர்த்தாக்களுக்கு எப்படி போகோபகரணமோ அப்படியே பாகவதாளுடைய தேஹமும் ஈச்வரனுக்கு போகோபகரணம். அதற்கு ப்ரமாணம். "ஸதீநாம் யொஷிதாம் தெஹ: யதொவகரணம் ஸவெஷ, ஸதஸ்ணாம் ஸமவஸ ஸஸ தெஹ: ததஸ ஜமஸ ஶுரொ:" "ஸதீநாம் யோஷிதாம்

தேஹ: யதோபகரணம் பவேத், பர்க்ருணும் பகவத் பக்த தேஹ:
தத்வத் ஜகத்குரோ:'' என்பதாம்.

அந்த ஸ்நாநம் நித்யமென்றும் நைமித்திகமென்றும் காம்யமென்றும் மூன்று வகையாயிருக்கும். அதில், நித்யஸ்நாநம் பகவதாராதநோபயோகி யாகையாலே நித்யமநுஷ்டேயம். நைமித்திகமாவது சண்டாளாதி அசுத்தஸ்பர்சமுண்டானல் அதற்கு ப்ராய: சித்தமாக அவசியமநுஷ்டேயமான ஸ்நாநம். அங்ஙனமன்றிக்தே பகவதுத்ஸவாந்தத்தில் அவப்ருத நிமித்தமான ஸ்நாநம்.

தாஸாளாயிருக்கிறவர்களுக்கு ஸ்வாம்யுத்ஸவ உபலாளனம் கிங்கரதர்மமாகையாலே பரமைகாந்திகளுக்கு அநுஷ்டேயம். அப்படியே ஆழ்வார், ஆசாரியர்களுடைய உத்ஸவாந்தத்தில் அவப்ருத நிமித்தமான ஸ்நாநம் அநுஷ்டேயம். இதற்கு ப்ரமாணம். ‹‹உசுஸவாவஹுரதெ விஷ்ணொ: யஃ ஸ்நாயாசு விஷ்ணுநாஸஹ। ஸவெகுண்டம் வ்ருஜெலொகம் நவெநரகமாப்நுயாசு'' ''உத்ஸவாவப்ருதேவிஷ்ணோ: ய: ஸ்நாயாத் விஷ்ணுநா ஸஹ, ஸவைகுண்டம் வ்ருஜேத்லோகம் நசேத் நரகமாப்நுயாத்'' இதன் அர்த்தம். விஷ்ணுவோடே உத்ஸவாவப்ருதத்தில் ஸ்நாநம் எவன் பண்ணுகிறானே அவன் வைகுண்டத்தை அடைவன். அப்படிச்செய்யாத பக்ஷத்தில் நரகத்தை அடைவன் என்பதாம். பக்தோத்ஸவத்தைப் பற்றிய ப்ரமாணங்களில்

‹‹ஹக்தொத்ஸவம் தயாராத்ரௌ குர்வீத ஸுஶுபாவஹம்।
அந்தெவாவஹ்ருதம் குர்யாத் புண்யதொயெமநொஹரெ॥
ப்ரபவெச்ச விஷ்ணு ஸூக்தாநி பாவமாநைர்விஶெஷத:।
விஶிஷ்டை: வைஷ்ணவைஸ்ஸார்த்தம் ஸ்நாதவ்யம் தத்ரபக்தித:॥

''பக்தோத்ஸவம் ததாராத்ரௌ குர்வீத ஸுசுபாவஹம்
அந்தேசாவப்ருதம் குர்யாத் புண்யதோயேமநோஹரே
ப்ரபடேதவிஷ்ணுஸூக்தாநி பாவமாநைர்விசேஷத:
விசிஷ்டை: வைஷ்ணவைஸ்ஸார்த்தம் ஸ்நாதவ்யம் தத்ரபக்தித:''

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதன் அர்த்தம். மங்களகரமான பக்தோத்ஸவத்தை ராத்திரியில் பண்ணக்கடவன். முடிவில் புண்யதீர்த்தத்தில் அவப்ருதஸ்நாநம் பண்ணக்கடவன். விஷ்ணுஸூக்தம், பாவமாநிகள் இவைகளைப் படிக்கக்கடவன். அதுவும் விசிஷ்டாளான வைஷ்ணவர்களோடு பக்தியோடே அந்த ஸ்நாநம் கர்த்தவ்யம் என்பதாம்.

உபராகஸ்நாநம் லோகஸங்கிரஹார்த்தம் ஆவசியகம். அது தவிர ஸேதுஸ்நாநம் ஸமுத்திரஸ்நாநம் கெங்கைமுதலான புண்ய தீர்த்தங்களில் ஸ்நாநம் இவைகள் அகரணேப்ரத்யவாய மல்லாதன வாகையாலே காம்யமாம். ப்ராத:காலங்களில் அந்த தீர்த்தங்கள் ஸந்நிஹிதங்களாயிருந்தால் அவைகளில் ஸ்நாநம் பண்ணக்கடவன்.

அங்ஙனமன்றிக்கே, "யத்ர பாகவதா: ஸ்நாநம் குர்வந்தி விமலாஶயா:। தத்தீர்த்தம் அதிகம் வித்தி ஸர்வபாபப்ரணாஶநம்॥ ஸ்நாதம் ச குருணா யத்ர தீர்த்தம் நாஸ்தி ததோ(அ)திகம்।" "யத்ர பாகவதாஸ்நாநம் குர்வந்திவிமலாசயா: தத்தீர்த்தம் அதிகம் வித்தி ஸர்வபாபப்ரணாசநம். ஸ்நாதஞ்சகுருணாயத்ர தீர்த்தம் நாஸ்த்யத்தோதிகம்." என்பதனால், பாகவதாள் நீராட்டம் செய்ததீர்த்தமும், ஆசார்யனாலே பரிக்கிரஹிக்கப்பட்ட தீர்த்தமும் மிகவும் பிரசம்ஸிக்கப்பட்டன.

கெங்கைமுதலான புண்யதீர்த்தமும் பாகவதாசார்ய பரிக்ருஹீத தீர்த்தமும் சேர்ந்திருக்குமிடத்தில் பாகவதாசார்ய பரிக்ருஹீத தீர்த்தத்திலேயே ஸ்நாநம் பண்ணவேணும். அங்ஙனமன்றிக்கே கிரியைக்கு அங்கமானஸ்நாநமும், மலநிவ்ருத்தியர்த்தம் செய்கிற ஸ்நாநமும், கிரியாஸ்நாநமும். இவைகளும் அநுஷ்டேயங்கள்.

தந்ததாவனம் முதலான வ்யாபாரங்களுடைய நிருபணம் விஸ்தரபயத்தாலே இங்குச் சொல்லப்படவில்லை. அவற்றையெல்லாம் மற்ற தர்மசாஸ்திரங்களில் நிரூபித்திருப்பதாற் கண்டுகொள்க.

இனி ஊர்த்வபுண்ட்ரதாரணம் நிரூபிக்கப்படும்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தஸாரம்.

நரவிஹார்ய[illegible] [illegible] ||
வேங்கடார்யஸ்ய தாஸோயம் வேங்கடார்யஸ்ய ஶேஷவான் ||
[illegible] ப்ராஜ்ஞா [illegible] நாயகம் |
ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸாரம் [illegible] ||

'ஸ்ரீவைஷ்ணவர்களின் பெருமை'யைப்பற்றிப் பேசிய நான் நெடுநாள் விட்டுத் தொடங்குகின்றேனாதலால் நடுவில் இவ்விஷயத்தைப் பேசிவிட்டு மறுபடியும் முன்விட்டவிஷயத்தைத் தொடங்கி முடிக்க நினைக்கிறேன்.

இங்கு எழுதத்துணிவது ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸாரமெனக் கொள்ளலாகும். ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸாரமாவது:— ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தத்துக்கு உள்ளபடியுள்ள நோக்கமாம். அதாவது:— ஒருசேதனன் தனக்கும் எம்பெருமானுக்குமுள்ள ஸம்பந்தத்தின் உறப்பை உள்ளபடியறிந்து தன்னுடைய உஜ்ஜீவனத்துக்குத் தனக்கொரு ப்ரவ்ருத்தியின்றிக்கே யிருப்பதாகும். நிஷ்க்ருஷ்டமான ஸம்பந்தஜ்ஞாநம் நிலைநிற்குமாகில் தன்னுடைய உஜ்ஜீவனத்துக்குத் தனக்கொரு ப்ரவ்ருத்தி வேணுமென்னும் நினைவு அடியோடொழியும் ஸம்பந்தஜ்ஞாநம் கனக்கவே க்ருஷ்டபலத்திலும் கருமமடியாக வருவதென்றுகொண்டு நசையொழியும். இப்படித் திருஷ்டபலம் கர்மமடியாக வருவதென்றும், அதிருஷ்டபலம் ஈசுவரன் க்ருபையடியாக வருவதென்றும், துணிவுகொண்டவர்கள் இரண்டுவிதமான ப்ரவ்ருத்தியையும் அடியோடுவிட்டு மார்பிலேகைவைத்து விசாரமற்று உறங்குவார்கள். ஆகையால் இவர்கள் உண்டுடுத்து உறங்கும் சோம்பேறிகளாவார். ஆனால் இவர்கள் உறக்க[illegible]வாழ்ச்சிக்குக் காரணமாகையாலே இவர்களை "வாழும் சோம்பர்" என்று பெரியார் பேசினர்.

இப்படி ஈசுவரனுக்கும் சேதனசேதனங்களுக்கும் பிரிவின்றியிருக்கும் சரீரசரீரியாகிய சம்பந்தத்தை உள்ளபடியுணர்த்தும்

முறைகொண்டு இந்த மதத்திற்கு விசிஷ்டாத்வைதமெனப் பெயர் பரவலாயிற்று. விசிஷ்டம்—சேதனு சேதனங்களைப் பிரிவின்றிக் கொண்டதொரு வஸ்து. அத்வைதம்-அப்படிப்பட்டவஸ்து ஒன்றே யாகும். ஆக இம்மதத்தின் பெயரை நோக்கினால் சேதனு சேதனங்கள் ஈசுவர சரீரங்களாமென்பது விளங்கும்.

இப்படி இச்சேதனன், ஈசுவரசரீரமாய் சேஷமாயிருக்கு மிருப்பை உணர்த்த வேண்டியே ஆத்மாவுக்கு அழியாத பேரான அடியான் என்கிறமுறையை உணர்த்துகிற அடியேன் என்கிற சொல்லையே தன்னை உணர்த்துகிற வாசகசப்தமாக ஸித்தாந்திகள் காட்டித்தந்தார்கள். ஆகையால் அடியேன் என்கிற பதத்துக்குள்ள பொருளை உற்றுநோக்கினுல் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸாரம் நன்கு விளங்கும். அடியேன்—சேஷபூதன். சேஷபூதனுவான் சேஷிக்கதிசயத்தை விளைக்குமவனுய் தனக்கொரு அதிசயத்தை நாடாதவன். ஆகையால் இவனுக்கென்று ஒருபலமில்லாமையால் இவனுக்கென்ருெரு ப்ரவ்ருத்தியில்லை. சேஷவஸ்துவால் ஏற்படும் அதிசயம் சேஷிக்கே யாகையாலே இச்சேதனனுடைய லாபம் பரமசேதனுகிய ஈசுவரனுடையதாய் அதற்காக ஏற்படும் ப்ரவ்ருத்தியும் ஈசுவரனுடையதாயிருக்கும்.

ஆகையாலன்றோ ஸ்ரீபாஷ்யகாரர் பாஷ்யந்தலைக் கட்டுமளவில் முக்தனுனவனுக்கு மறுபடியும் ஸம்ஸாரசம்பந்தம் வருமோவென்கிற ஸம்சயத்தைப் பரிஹரிக்கவந்த கடைசி ஸூத்திரத்துக்கு வ்யாக்யாநம் செய்தருளும்போது புனராவ்ருத்தியில்லாமைக்கு ப்ரமாணங்களைக்காட்டி அதில்லாமைக்கு யுக்திகாட்டுகிறவிடத்தில் "𑌨 𑌚 𑌪𑌰𑌮 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸𑌤𑍍𑌯𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌃 𑌅𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌕𑌦𑌾𑌚𑌿𑌦𑌾𑌵𑌰𑍍𑌤𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌿" "நசபரமபுருஷ: ஸத்யஸங்கல்ப: அத்யர்த்தப்ரியம் ஜ்ஞாநிநம் லப்த்வா கதாசிதாவர்த்தயிஷ்யதி" ஸத்யஸங்கல்பனுன புருஷோத்தமன் அதிசயிதப்ரீதி விஷயமான ஜ்ஞானியையடைந்து அவனை ஒருநாளும் திருப்பிவிடமாட்டான் என்று அருளிச்செய்தார். இதனுல் ஜ்ஞாநியானவனை அடைந்தது ஈசுவரனென்று ஏற்படுகிறது. இதனுல் சேதனனுடைய லாபம் ஈசுவரனுக்கு என்பது நன்ருய் விளங்குகிறதல்லவா. அப்படியன்றிக்கே

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

ஈசுவரலாபம் சேதனனுக்கென்பது திருவுள்ளமாகில் தன்னை யடைந்த ஜ்ஞாநியை என்னும் பொருள்பட "ஜ்ஞாநிநோத்தாநம் ஹ்ராவும்" "ஜ்ஞாநிநமாத்மாநம் ப்ராப்தம்" என்று அருளிச்செய்திருக்கவேணும். அவ்வாறு அருளிச்செய்யாததினல் சேதனலாபம் ஈசுவரனுக்காயிருக்கும். லாபம் அவனுக்காம்போது "ஶாஸ்த்ரஃபலம் ப்ரயோக்தரி" "சாஸ்த்ரபலம் ப்ரயோக்தரி" என்றபடி ப்ரவ்ருத்தியும் அவனுக்கேயாகவேணும். ஸ்வத்தினுடைய லாபமும், அதுக்கீடான ப்ரவ்ருத்தியும் ஸ்வாமிக்கே யுரியனவாயிருக்குமென்பது தெளிவாமாதலால் ஸ்வஸ்வாமிபாவஸம்பந்தமடியான ப்ரவ்ருத்தியும் ஈசுவரனுக்கேயாயிருக்கத் தட்டில்லை.

இனி, சேதனனுடைய மோக்ஷத்திற்கு ஏற்பட்ட ஆதிப்ரவ்ருத்தி ஈசுவரனுக்காயிருக்கும். அவனுடைய ப்ரவ்ருத்திக்கு இசைந்திருக்கையே இவனுக்கு வேண்டுவது. அப்படியிசைந்திருப்பதை அதாவது அவனுடைய ப்ரவ்ருத்திக்கு விரோதமான ப்ரவ்ருத்தியில்லாமையைத்தான் சரணுகதியென்று கூறுவதாகும். அதுக்குத் தனித்து உபாயத்வமில்லை. லோகத்தில் ஒருவன் ஒருவனை ரக்ஷிப்பதாக முயன்ற அளவில் ரக்ஷிக்கப்படுமவன் இசைந்திருப்பது அவனுடைய ரக்ஷணத்துக்கு உபாயமாகக் கண்டதில்லை. ஸ்வத்தினுடைய லாபநஷ்டங்கள் ஸ்வாமியைச் சார்ந்ததாகையாலும், சேஷவஸ்துவைக்கொண்டு அதிசயம் பெறவேண்டுவது சேஷியேயாகையாலும், சரீரத்தினுடைய ஸௌகர்யமான கார்யங்களுக்கு உரியவன் சரீரியேயாகையாலும் ஸம்பந்தத்தை உள்ளபடி யுணரவே நமக்கு ரக்ஷணத்தில் அந்வயம் அடியோடு ஒழியும். 'மோக்ஷம் தாயப்ராப்தம்' அதற்கு சாதனுநுஷ்டானம் செய்வது பைத்ருகதனத்திற்கு (பிதுரார்ஜித சொத்திற்கு) சாதனுநுஷ்டானம் செய்வதுபோலும், தாய்மூலைப்பாலுக்கு விலை கொடுப்பதுபோலுமாம். ஆக ஸர்வேசுவரனுடைய ஸம்பந்தத்தை உணர்ந்து தன்னுடைய ரக்ஷணத்தில் கைவாங்கியிருப்பதே ஸித்தாந்தஸாரமாகும்.

இவ்வாறுகில் விசிஷ்டாத்வைதமதத்தை களையறுத்து உள்ளபடி யுணர்த்தும் ஸ்ரீநிகமாந்ததேசிகன் ஸ்வரக்ஷணத்தில் அந்வய

மற்று அவன் கை பார்த்திருப்பது அசக்தனுக்காயிருக்கும். சக்தனு யிருக்குமவன் முமுக்ஷுக்களுக்காகவே விதித்திருக்கும் சாதனங்களை அநுஷ்டிக்கக்கடவன் என்றருளிச்செய்தார். இங்ஙனம் அருளிச்செய்த இவர் கருத்தோடு முன்னுரைத்தவை யெங்ஙனம் பொருந்துமெனில்; பரப்ரஹ்மஸ்வரூபத்தை உள்ளபடி உணர்த்தும் உத்தரமீமாம்ஸைக்கு ப்ரவ்ருத்தகரான ஸ்ரீவேதவியாஸபகவானுக்கு ஜைமினி சிஷ்யராயிருந்தும் அவர் பூர்வமீமாம்ஸையில் கருமத்தை நிரூபிக்கும்போது கருமத்துக்கு மேற்பட்ட தேவதையென்பதே கிடையாதென்று பேசியதெல்லாம் ஜைமினியினுடைய அந்தரங்க அபிப்பிராயமாகாவன்றோ! சிலமந்தமதிகளுக்குக் கருமத்தில் அச்ரத்தையுண்டாகாமைக்குக் கருமத்திற்கு மேற்பட தெய்வமில்லையென்று உரைத்ததாக நம்பூர்வர்கள் நிர்வாஹம்.

தேஹாத்ம விவேகந்தொடங்கி பரதத்வஜ்ஞானம்வரை வந்து மோக்ஷாபிருசியும் உண்டாகி ஏதோ ஸங்கல்ப விசேஷத்தால் நிஷ்க்ருஷ்டஸம்பந்தஜ்ஞானம் உண்டாகாதிருக்குமாகில் அவர்களுக்கு ஸ்வப்ரவ்ருத்திவாஸனையாலே ஸாதனாந்தராநுஷ்டானமே முன்னிற்கும். அப்படியுள்ள் அதிகாரிகளுக்கு 'ஸ்வரக்ஷண ப்ராப்தி இவனுக்கில்லை' என்று உபதேசிக்குமளவில் இதிலும் இவனுக்கு விசுவாசமில்லா தொழிவதோடு ஸாதனாநுஷ்டானத்திலும் ஸம்சயபுத்தி உண்டாகி இவன் நசிக்கும்படி நேருமென்று கருதி இவ்வதிகாரியுடைய அச்ரத்தையை ஒழிக்கவேண்டி வேதாந்த தேசிகன் இங்ஙனம் அருளிச்செய்தாரேயன்றி வேறில்லை.

(தொடரும்.)

காரப்பங்காடு, ஸ்ரீ. உ. வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமியின்,
தமையனார் குமாரரும், அந்தேவாசியுமான
வேங்கடாசார்யர், சேரங்குளம்.

ஸ்ரீ:

பன்மணித்திரள்.

விரக்தி.

எம்பெருமானையே தஞ்சமாகப்பற்றிய மெய்யடியார்கள் விரக்தியென்பதொன்றை அவசியம் கைக்கொள்ளவேண்டும். விரக்தியாவது:— ஆசையின்மையாம். எம்பெருமானிடத்திலும், அவன் விஷயமான கைங்கர்யத்திலும், அவனடியாரிடத்திலும், அவர் விஷயமான கைங்கர்யத்திலும் ஆசைகொண்டு இவையொழிந்த எல்லாவற்றிலும் ஆசைபற்றிருத்தலையே இங்கு விரக்தியென்று குறிப்பிடலாயிற்று. இந்திரியங்கட்கு விஷயம் பலவாகவிருக்கின்றமையால் அவையடியாகப் பிறக்கும் ஆசையும் பலவாயிருக்கும். அவற்றுள் பொருளாசையென்பது தலைசிறந்ததாகும். இப்பொருளாசையுடையார் 'உண்டெனின் உயிர் வாழ்வேன்; இன்றெனின் மாள்வேன்' என்ற நிலைமையுடையவர்களாகக் காணப்படுகிறார்களன்றோ. அதனால் பொருளாசை வலியுடைத்தென்பது பெறப்படும்.

இப்பொருளாசை அழிவுக்கேதுவாம் என்பதைத் திருவுள்ளம் பற்றியே ஆழ்வார் "கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாக" என்று அருளிச்செய்தார். அதுபோலவே கூரத்தாழ்வான், 'உடையவர் திருவடிகளிலே நித்யகைங்கர்யஞ்செய்து உஜ்ஜீவிக்கவேண்டும்' என்று கருதிவந்த காலத்துத் தமக்குள்ள பொருள் எல்லாவற்றையும் சூறையிட்டு வந்தார்.

இது ஒருபுறமிருக்க, திருவரங்கத்தமுதனார் ஒருநாள் உடையவரைத் தண்டன்ஸமர்ப்பித்துநின்று ஸ்வாமி! 'அடியேனுடைய மாதாவின் தசாஹாநந்தரம் ஏகாஹத்திற்குத் தேவரீருடைய அந்தரங்கருள் எவரேனும் ஒருவரை அனுப்பியருளவேண்டும்.' என்று விண்ணப்பஞ்செய்து நின்றார். அப்பொழுது உடையவர் கூரத்தாழ்வானை நோக்கி 'நீர் போய் வருவீராக' என்று நியமித்தார். கூரத்தாழ்வானும் அந்நியமனத்தைச் சிரமேற்கொண்டு எழுந்தருளினார்.

அப்பொழுது அமுதனார், 'ஆழ்வான் இன்று இங்கெழுந்தருளும் பாக்யத்தைப் பெற்றோம்' என்று களிப்புடையவராய் ஏகாஹத்திலே அமுது செய்யப்பண்ணி மிகுதியான திரவியத்தை அவர் திருவடிகளிலே ஸமர்ப்பித்து 'இவற்றை யங்கீகரித்தருளவேண்டும்' என்று பிரார்த்தித்தார். ஆழ்வானும், அவருடைய பிரார்த்தனைக்கு இரங்கியருளி அங்கீகரித்து அவற்றை வருகிற வழியில் இறைத்துவிட்டுத் திருக்காவேரியில் நீராடித் திருமண்காப்புச்சாத்திக்கொண்டு மீளவும் உடையவர் ஸந்நிதியை யடைந்து ஸேவித்து நின்றார். உடையவர் ஆழ்வானைப்பார்த்து 'அமுதனால் கொடுக்கப்பெற்ற அர்த்தமெங்கே' என்று கேட்க, ஆழ்வான் அவை அநர்த்தமாகையாலே அப்பொழுதே கைகழிந்தன என்று விண்ணப்பஞ் செய்தார். உடையவர் 'அவற்றை நம்முன்னிலையிற் கொணர்ந்து வைப்பதன்றோ கடமையாம்' என்றருளிச்செய்தபொழுது ஆழ்வான், 'ஸ்வாமி! சர்த்தி (வாந்தி) வந்தால் நிர்ப்பந்தித்து நிறுத்தப்போமோ? அது தேவரீருடைய திவ்யாஜ்ஞையைப் பின் செல்லுமோ?' என்று விண்ணப்பஞ்செய்ய உடையவர் இதைக்கேட்டு 'இஃதொரு அத்யவஸாயம் இருந்தபடி என்' என்று திருவுள்ளமுவந்தார்.

இதனால் மெய்யடியாராயிருப்பார்க்குப் பொருளாசையற வேண்டுமென்பது பெறப்பட்டது.

ஸுலபாராதனன்.

ஒப்புயர்வற்ற ஸர்வேசுவரனை அற்பமதியுடையோமாகிய நாம் ஆராதனைக்குரிய திரவியங்களைக்கொண்டு ஆராதித்து அவன் திருப்தனாம்படி செய்வது எங்ஙனம்? அவனோ நாமிட்டதுகொண்டு திருப்தனாக வேண்டாதபடி அவாப்தஸமஸ்தகாமனாயிராநின்றானாதலால் (ஸமஸ்தபோக்ய வஸ்துக்களினாலும் பூரணனாயிராநின்றானாதலால்) அவனை ஆராதித்துத் திருப்தி செய்வதொன்றில்லையென்பது தெளிவாக விளங்குகிறதன்றோவெனின்; இங்குரைக்கப்பெற்ற ஸர்வபரிபூரணத்வம் ஸர்வேசுவரனிடத்திலிருப்பதால் அவன் ஸுலபாராதனனாயிருக்கிறானென்றறியத் தக்கது. குணபூர்த்தியில்லாத தெய்வமன்றோ தன்னையடைந்தவனிடுகிற வஸ்துவின் தாரதம்

யங்களைக்கண்டு மகிழ்வடையும். ஒருவனிடத்தில் ஒன்று பெற்றத னால் ஸர்வேசுவரனுக் கோருயர்வுண்டாகுமென்ப தொன்றில்லை யாதலால், நமது சேஷத்வஸ்வரூபஸித்தியின் நிமித்தமாக ஏதே னும் பணிவிடைசெய்தால் அதை அவன் தன்பேறாக நினைத்திருப் பான். மேலும், அவன் ஆராதிப்பவனிடம் திரவியத்தின் மேன்மை யைக் கருதாது அவனுடைய நெஞ்சின் அன்பை மாத்திரம் ஆராய் வான். எம்பெருமான் ஸுலபாராதனன் என்பதைக்குறித்து ஆழ் வாரும்,

> "பரிவதிலீசனைப்பாடி
> விரிவதுமேவலுறவீர்
> பிரிவகையின்றிநன்னீர்தூய்ப்
> புரிவதுவும்புகைபூவே."

என்று அருளிச்செய்தார். இதற்குப் பட்டர் வ்யாக்யானம் செய் தருளுகிறபோது 'அகிற்புகை கருமுகைப்பூ என்றாற்போல விசேஷித் துச் சொல்லாமையால் எந்தப்புகையைக் கொண்டாயினும், எந்தப் பூவைக்கொண்டாயினும் ஸர்வேசுவரன் திருவடிகளில் அடிமை செய்தாலும் அவன் அதை அங்கீகரித்தருள்வன்' என்றருளிச் செய்து மேலும் அதன் விவரணமாக, சருகையிட்டுப் புகைத்துத் தூபம் ஸமர்ப்பிக்கவும் அமையும்; கண்டங்கத்தரிப்பூவையிட்டு அர்ச்சிக்கவும் அமையும் என்று அருளிச்செய்த காலத்தில் நஞ்சீயர் "நகண்டகாரிகாபுஷ்பம் தேவாய விநிவேதயேத்" "நகண்ட காரிகாபுஷ்பம் தேவாய விநிவேதயேத்" என்று கண்டங்கத்தரிப்பூ வைப் பகவதர்ச்சனைக்கு உதவாததாகச் சாஸ்திரம் விலக்கியிருப்பதற் குக் கருத்துத்தான் யாதோ? என்று வினவ பட்டர் அவனுக்கு ஆகாத தென்கிறதன்று; அன்போடு சென்று பறிக்கிற அடியவர் கையிலே முள்தைக்குமென்பது பற்றியே தவிர்த்ததாகனும்;

> கள்ளார்துழாயும்கணவலரும் கூவிளையும்
> முள்ளார்முளரியுமாம்பலுமுன்கண்டக்கால்
> புள்ளாயோரேனமாய்ப்புக்கிடந்தான் பொன்னடிக்கென்று
> உள்ளாதாருள்ளத்தையுள்ளமாக்கொள்ளோமே.

என்று பெரியதிருமொழியில், திருத்துழாயோடு காக்கணம்பூ, வில் வம் தாமரைப்பூ, அல்லிப்பூ என்ற இவற்றையும் ஒருங்குகூட்டித் திருமங்கைமன்னன் அருளிச்செய்திருப்பதால் எம்பெருமான் திரவி

யத்தின் தாரதம்யம் பார்ப்பதில்லையென்பது விளங்குகிறதல்லவா. அன்பே ப்ராதான்யம்.* அன்பில்லாதவனிடில் திருத்துழாயுமாகாது; அன்போடே இடில் காக்கணம்பூவுமாம். 'புள்ளாயோரேனமாய்ப் புக்கிடந்தான்' அப்ராக்ருத த்ரவ்யம் வேண்டும்' என்றிருந்தானாகில் ஸ்ரீவைகுண்டத்திலிரானோ; ஏதேனும் திரவ்யமாம்படித் தன்னை ஏதேனும் திரவ்யமாகச் சிறுகியிட்டவன்; பக்ஷிகளுக்கும், மிருகங்களுக்கும் ஆகாதது இல்லையிறே என்றருளிச்செய்தார். நஞ்சீயர் கேட்டு மிகவும் மகிழ்வுற்றிருந்தார்.

இதனால், எம்பெருமான் ஆராதனைக் கெளியனாயிருப்பானெனவே அவனை யாவரும்பற்றித் தம்மாலியன்ற பணிவிடை செய்து உஜ்ஜீவிக்கலாமென்பது பெறப்பட்டது.

(தொடரும்.)

---

* 'திருவேங்கடமுடையான் செண்பகப்பூவைத் திருவுள்ளமுவந்து சாத்திக்கொள்வான்' என்றுகருதிய ஒருராஜபுத்திரன் ஒருநாள் கடையிலுள்ள செண்பகப்பூவெல்லாம் விற்றுவிட ஒருபூமாத்திரம் அங்கிருக்கக்கண்டு அதை யாவதுவாங்கித் திருவேங்கடமுடையானுக்குச் சாத்தப் பேரவாவுற்று 'இதன் விலையாது' என்று வினவினான். அப்பொழுது மற்றொரு ராஜபுத்திரனும் அங்குவந்து அப்பூவைக் குறிப்பிட்டு 'இதன் விலையாது?' என்று வினவினான். கடைக்காரன் இவ்விருவர் அப்பூவில் ஆசையுற்றிருப்பதைக் கண்டு 'இதன்விலை ரூபா ஒன்றாம்' என்றான். அப்பொழுது ராஜபுத்திரர் இருவருக்கும் வாதமுண்டாகிப் பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம், லக்ஷம் ரூபாவரை ஒருவரோடொருவர் போட்டியிட்டுக் கேட்டு அப்பூவின்விலையை யேற்றிவிட்டார்கள். இவ்விருவருள் முன்னர் விலைகேட்ட ராஜபுத்திரனே அவ்வொரு புஷ்பத்தை லக்ஷரூபா கொடுத்துவாங்கி அன்புடன் திருவேங்கடமுடையான் திருவடிகளில் சாத்திச்சென்றான். அன்றிராத்திரித் திருவேங்கடமுடையான் ராஜபுத்திரன் ஸ்வப்பனத்திலெழுந்தருளி 'நீ யிட்டபூ எனக்குக் கனத்துச்சுமக்க வொண்ணுகிறதில்லை' என்று திருவுள்ளமுவந்து அருளிச்செய்தான். இதனால், அன்போடிடுகிற திரவ்யம் அற்பமானாலும் அதை எம்பெருமான் மிகவும் பெருமையாகப் பாராட்டுவானென்பது பெறப்பட்டது.